# இலங்கையினுள் வெளிநாட்டுசக்திகள் ஊடுருவல்

(கொழும்பு)

இலங்கையில் கலவரத்தையும் பெரும் குழப்பத்தையும் ஏற்படுத்த ,வெளிநாட்டுசக்திகள் சில நாட்டினுள் ஊடுருவிவிட்டதாக ஜனாதிபதி பிரேமதாஸா எச்சரித்துள்ளார்.

திவுலப்பிட்டியில் நடைபெற்ற உள்ளூராட்சி தேர்தல் பிரசார கூட்டத்தில் உரையாற்றுகையில் ஜனாதிபதி இந்த எச்சரிக்கையை விடுத்தார்.

(4-ம் பக்கம் பார்க்க)

விலை ரூபா 4-50

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் : 33 சித்திரை 12 ஷவ்வால் 9 இதழ்: 74

யாழ்ப்பாணம் வியாழக்கிழமை 25-04-1991

## 'மதலினு' கப்பலும் ஆயுதங்களும் பறிமுதல்

(கொழும்பு)

கொழும்புத் துறைமுகத்தில் கடந்த ஒரு மாதகாலமாகத் தடுத்துவைக்கப்பட்டிருந்த 'மதலினு' கப்பலும் அதில் வந்த பல கோடி ரூபா பெறுமதியான ஆயுதங்களும் இலங்கை அரசினால் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

(4-ம் பக்கம் பார்க்க)

## பரீட்சார்த்திகள் தொகை மிகக் குறைவு

(நமது நிருபர் கே.வி. கே. திருலோகமூர்த்தி)

கிளிநொச்சி மாவட்டத்தில் க. பொ. த. உயர்தரப் பரீட்சை இரு நிலையங்களில் 5மண்டபங்களில்நடைபெற்று வருகிறது. இதேவேளை பரீட்சாத்திகளின் வரவு வெகுவாக

(4-ம் பக்கம் பார்க்க)

★ இலங்கையின் கூற்று நிராகரிப்பு

# புலிகள் விடுதலைப்போராளிகள்

# மேற்குலக நாடுகள் கணிப்பு

[நமது வெளிநாட்டு செய்திச் சேவை]

**தமிழீழ விடுதலைப் புலிகளை பயங்கரவாதிகளென இலங்கை அரசு கூறி வருவதை மேற்குலக நாடுகள் பல நிராகரித்துள்ளன. ஒரு இனத்தின் 'விடுதலைப் போராளிகளாகவே தாம் புலிகளை கருதுவதாகவும் அந் நாடுகள் கூறியுள்ளன.**

விடுதலைப்புலிகளை தத்தமது நாட்டு தலைநகரங்களில் அலுவலகங்களை அமைக்கவும் இந் நாடுகள் அனுமதித்துள்ளன.

'ஐரிஷ்' கெரில்லாக்களை பயங்கரவாதிகளாக கூறும் பிரிட்டன், புலிகளை தாம் அவ்வாறு கருதவில்லையென கூறியுள்ளது. மேலும் அமெரிக்கா, கனடா, பிரான்ஸ் உட்பட மேற்குலக நாடுகள் பல புலிகளை தமது நாட்டில் தாராளமாக உலாவரவும் அனுமதியளித்துள்ளன.

நட்புறவு பேணும் இலங்கையின் ஆயுத உதவிக் கோரிக்கையையும் இந்த நாடுகள் மறுத்துள்ளதுடன் இலங்கையில் மனித உரிமை மீறப்படுவதையும் இவை உன்னிப்பாக கவனித்து வருகின்றன. (சி)

## புலிகள் தாக்குதல் 5 படையினர் பலி

(திருமலை)

திருமலையில் நேற்று புலிகள் மேற்கொண்ட தாக்குதல் ஒன்றில் 5 படையினர் ஸ்தலத்திலே கொல்லப்பட்டனர்.

இப்பகுதியில் ரோந்து சுற்றிய படையினரின் ஜீப்வண்டி மீது புலிகள் திடீர்த்தாக்குதல் மேற்கொண்டதிலே இவர்கள்

(4-ம் பக்கம் பார்க்க)

## மனித உரிமை மீறல் கனடா கவலை

(கொழும்பு)

இலங்கையில் மனித உரிமை தொடர்ந்தும் மீறப்பட்டு வருவது குறித்து கனடா கவலை தெரிவித்துள்ளது.

கனடா வெளிவிவகார அமைச்சின் செயலர் திரு ஜோ கிளார்க் கொழும்பிலுள்ள கனேடிய தூதரகம் மூலம் அண்மையில் வெளியிட்ட அறிக்கையில் இதனை தெரிவித்துள்ளார்.

வடக்கு கிழக்கு மக்களின் துயர் குறித்தும் இராணுவ நடவடிக்கை குறித்தும் கனடா கவலை தெரிவித்துள்ளது. (சி)

## கொழும்பு சென்ற 20 தமிழர் ஆயுதபாணிகளால் கடத்தல்

(மட்டக்களப்பு)

கல்முனையிலிருந்து கொழும்பு செல்லும் தமிழ் பயணிகள் தொடர்ந்தும் கடத்தப்பட்டு வருகிறார்கள்.

அம்பாறை 17-ம் கட்டையிலுள்ள பொலிஸ் நிலையத்திற்கு அண்மையில் வைத்து கடந்த 19-ம் திகதி முதல் 22-ம் திகதி வரை 20 தமிழர்கள் மர்மமான முறையில் கடத்தப்பட்டுள்ளனர்.

இராணுவ உடையில் ஆயுதபாணிகளாக வருவோரே இக் கடத்தலில் ஈடுபடுவதாக தப்பி வந்த ஒருவர் தெரிவித்துள்ளார். (சி)

## கொழும்பு செல்ல அனுமதி

(பூநகரி)

வடபகுதியிலிருந்து கொழும்பு சென்ற பயணிகள் வவுனியாவில் இராணுவ நடவடிக்கை காரணமாக சில தினங்கள் தரித்து நின்றபின் நேற்று முன்தினம் முதல் கொழும்பு செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளனர். (23)

## 2,220 தமிழரை அம்பாறையில் காணவில்லை

(அம்பாறை)

அம்பாறை மாவட்டத்தைச் சேர்ந்த 2,200 தமிழர்கள் காணாமல் போய்விட்டதாக 'கொழும்பு பத்திரிகை' ஒன்று தெரிவித்துள்ளது.

3,570 இளைஞர்கள் தடுப்பு முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனராம்,

இம்மாவட்டத்தை சேர்ந்த 6,382 தமிழ் குடும்பங்களும் தங்கள் வீடுகளை விட்டு அகதிகளாக வெளியேறிவிட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (சி)

## 'கிட்டு' பேட்டி

(லண்டன்)

விடுதலைப் புலிகள் சர்வதேச விவகாரப் பொறுப்பாளர் திரு சதாசிவம் கிருஷ்ணகுமார் (கிட்டு) அவர்களின் பேட்டி இன்று பி.பி.ஸியின் 'தமிழோசை'யில் இடம்பெற உள்ளது. (சி)

## இலங்கைக்கு ஆயுதம் வழங்க ஆஸ்திரேலியா மறுப்பு!

(கன்பரா)

இலங்கைப் படைகளுக்கு ஆயுத உதவி வழங்குமாறு இலங்கை அரசு விடுத்த கோரிக்கையை ஆஸ்திரேலியா நிராகரித்துள்ளது

போதியளவு ஆயுதங்களையும் அதற்குரியவெடிபொருட்களையும் வழங்குமாறு அண்மையில் இலங்கை, அவுஸ்திரேலியாவிடம் கோரியிருந்தது.

இக்கோரிக்கையை நிராகரித்த ஆஸ்திரேலியா: பிரச்சனைக்கு சுமுகமான தீர்வைக் காணுமாறும் அறிவுறுத்தியுமுள்ளது. (சி)

## இடைக்கால நிர்வாகம் தமிழ் குழுக்கள் ஆவல்

(கொழும்பு)

வடக்கு-கிழக்கில் இடைக்கால நிர்வாகமொன்றை ஏற்படுத்துமாறு கொழும்பிலுள்ள தமிழ் குழுக்கள் கோரியுள்ளன.

இது தொடர்பான மகஜர் ஒன்றையும் அவை ஜனாதிபதியிடம் கையளித்துள்ளனவாம்.

இதேவேளை தனித்தனி இரு மாகாணசபை தொடர்பான தமது ஆலோசனைகளை இவை முஸ்லிம்கட்சிகளிடம் சமர்ப்பித்துமுள்ளனவாம். (சி)

## 'முரசொலி பிரதம ஆசிரியர் தகுதி அற்றவர்' - புலிகள் அறிக்கை

(யாழ்ப்பாணம்)

சிறுவன் மீது பாலியல் வன்முறை பிரயோகித்த பெண்கள்' என்ற தலைப்பில் முரசொலி பத்திரிகையில் வெளிவந்த செய்தி தொடர்பாக கிடைத்த முறைப்பாட்டின் அடிப்படையில் நாம் செய்த விசாரணையின் முடிவில் முரசொலி பத்திரிகையின் பிரதம ஆசிரியர் பொறுப்பற்ற விதத்திலும், அநாகரீகமாகவும் நடந்து பத்திரிகா தர்மத்தை மீறியுள்ளார் .எனக்கண்டறிந்துள்ளோம்;

விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணி தலைமைச் செயற்குழு நேற்று விடுத்துள்ள அறிக்கையில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது;

(4-ம் பக்கம் பார்க்க)

# மாணவர் தொழில்திறன் கல்வியையும் பெறவேண்டும்

(உடுவில்)

''பாடசாலையில் பயிலும் ஒவ்வொரு மாணவனும் புத்தகக் கல்வியுடன் நின்றுவிடாது ஏதாவது ஒரு தொழில் திறன் கல்வியையும் பெற்றுக் கொள்ள வேண்டும். இன்றைய சூழ்நிலையில் கல்வியிலும் சகல மாணவர்களும் தொடர்ந்து மேற்படிப்புக்களை பயில வாய்ப்புக்கள் ஏற்படுமா என்பது சந்தேகம். அவர்கள் தாம் பெற்ற கல்வியுடன் தொழில் வாய்ப்பை பெற்று தமது பொருளாதார நிலையை சீராக்கி கொள்ள கனிஷ்ட பாடசாலை தொழில் நுட்ப பாடத்திட்டம் வழிசெய்கின்றது.''

பாடசாலைகளில் ஆண்டு 9-ல் இவ்வருடம் அறிமுகம் செய்யப்பட்டுள்ள கனிஷ்ட பாடசாலை தொழில் நுட்ப பாட (வர்த்தகம்) ஆசிரியர்களுக்கான கருத்தரங்கில் சுருக்கெழுத்து - தட்டெழுத்து சேவைக்கால ஆசிரிய ஆலோசகர் செல்வி வேலுப்பிள்ளை நாகரத்தினம் இவ்வாறு கூறினார்.

மருதனார்மடம் கோட்டத்துக்குட்பட்ட பாடசாலைகளான கருத்தரங்கு உடுவில் இராமநாதன் கல்லூரியில் நடைபெற்றது.

வர்த்தக பாடசேவைக்கால ஆசிரிய ஆலோசகர் திரு. கே. தேவச்சந்திரன் தலைமையில் இக்கருத்தரங்கு நடைபெற்றது.

செல்வி வேலுப்பிள்ளை நாகரட்ணம் தொடர்ந்து கூறியதாவது:

யாழ்ப்பாண மாவட்ட பாடசாலைகளில் தொழில் நுட்பபாடங்களுள் வர்த்தக பாடத்தையே அதிக அளவிலான மாணவர்கள் கற்பதற்கு முன்வந்துள்ளனர். அவர்களின் எதிர்பார்ப்புக்களை பூரணப்படுத்தி தொழில் வழிகாட்டல் செய்வது ஒவ்வொரு வர்த்தக ஆசிரியர்களினதும் கடமையாகும். மாணவர்கள் தொழில் ஒன்றை தெரிவு செய்து தமது வாழ்க்கையை சீர்செய்து கொள்ள எமது வழிகாட்டல் அவசியமாகின்றது.

தட்டெழுத்து துறையில் போதிய தட்டெழுத்து பொறிகள் இல்லாவிடினும், உள்ள பொறிகளில் கூடுதலான மாணவர்கள் பயிற்சி பெறக்கூடிய வாய்ப்புக்களை செய்து கொடுத்தல் வேண்டும் என்றார்.

கருத்தரங்கில் வர்த்தகப் பாடத்துக்கான கைநூல்களும் ஆசிரியர்களுக்கு வழங்கப்பட்டன. (109)


## வரிவிளம்பரம்

### தேவை

மலைவேம்பு விதை, வாகை, விதை தேவைப்படுகிறது. மில்க்வைற் - யாழ்ப்பாணம். [எ-1238]

### பழைய புத்தகசாலை இடமாற்றம்

பழைய புத்தகங்கள், கொப்பிகள், பேப்பர், சஞ்சிகைகள், போத்தல், பித்தளை, செப்பு, கோழித்தீன் பைகள் வாங்கப்படும் விற்கப்படும். புதிய விலாசம்: சேனாதிராசா 108, மானிப்பாய் றோட், யாழ்ப்பாணம். [சி-4676]

### புலமைப் பரிசில் பரீட்சை (ஆண்டு 5)

சிறந்த பெறுபேறுகளை வருடாவருடம் பெற்றுக் கொடுக்கும் புதிய கல்வி நிலையத்தால் நடாத்தப்படும் ஆண்டு 5 ற்கான மாதிரி புலமைப் பரிசில் பரீட்சை (முதலாவது) வெளிமாணவர்களுக்கானதும் (மூன்றாவது) உள்ளக மாணவர்களுக்கானதுமான பரீட்சை 28-04-91 ஞாயிறு மு. ப. 8.00 மு. ப. 10. 30 மணி நேரங்களில் நடைபெறும் முற் கூட்டியே பதிவு செய்யவும். புதிய கல்வி நிலையம், 19, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (சி-4668)


## 37 மருத்துவ மாதர் பயிற்சி பெற்றனர்

(காங்கேசன்துறை)

தெல்லிப்பழை சுகாதார பயிற்சி நிலையத்தில் 6 மாதகால வெளிக்களப் பயிற்சியை பெற்றுவந்த 37 மருத்துவ மாதர்கள் தமது பயிற்சியை முடித்து வெளியேறியுள்ளனர்.

இணுவில் ஆஸ்பத்திரி வளவில் இயங்கும் மேற்படி பயிற்சி நிலையத்தில் வடக்கு கிழக்கு மாகாணங்களிலிருந்து தெரிவு செய்யப்பட்ட இந்த 37 மருத்துவ மாதர்களும் கடந்த 6 மாதங்களாக சுகாதாரத் துறையில் பல்வேறு பயிற்சிகளை பெற்றுவந்தனர்.

பயிற்சியை முடித்து இறுதிப் பரீட்சையில் தோற்றிய இம் மருத்துவ மாதர்களுக்கு பரீட்சை முடிவைப்பொறுத்து நியமனங்கள் வழங்கப்படும் என தெரிவிக்கப்படுகிறது (86)

## மரக்கன்று இலவசம்

வில்வம், நெல்லி, மகிழங் கன்றுகள், ஆலயங்கள் மற்றும் பொது தாபனங்களில் வளர்ப்பதற்குத் தேவைப்படுவோரை உரிய விண்ணப்பத்துடன் நேரில் வந்து இலவசமாகப் பெற்றுக்கொள்ளும்படி மில்க்வைற் அதிபர் தெரிவித்துள்ளார்.

## தற்கொலை

[யாழ்ப்பாணம்]

தனது மனைவியுடன் தகராறு செய்துகொண்ட ஒருவர் சுருக்கிட்டு தற்கொலை செய்து கொண்டார்.

இச்சம்பவம் திருநெல்வேலி சைவவித்தியாசாலை ஒழுங்கையில் இடம் பெற்றது. (56)

## சித்திரத் தேர் வெள்ளோட்ட விழா

(யாழ்ப்பாணம்)

திருநெல்வேலி அரசடி அருள்மிகு ஸ்ரீ சிவகாமசுந்தரி அம்பாள் தேவஸ்தானத்தில் நவகோண வடிவமான சித்திரத் தேர் வெள்ளோட்ட விழா நாளை வெள்ளிக்கிழமை காலை எட்டுமணிக்கு இடம்பெறும்.

ஈழத்தில் முதன்முதல் நிர்மாணிக்கப்பட்ட நவகோண சித்திரத்தேர் இது என்பது குறிப்பிடத்தக்கது.

புதிய நவகோண சித்திரத் தேர்த் திருவிழா சனிக்கிழமை காலை 8-00 மணிக்கு இடம் பெறும். (152)


## கொம்பியூட்டர் பயிற்சி

IDPயின் சேவை மீண்டும் ஆரம்பம்

BASIC, D-BASE - III + Courses

ஆரம்பம்: 28-04-91 (8-30 A. M)

IDP COMPUTER CENTRE MANIPAY Rd, MANIPAY

[மானிப்பாய் ஆஸ்பத்திரி சமீபமாகவுள்ள மேல்மாடி]

[சி-4667]


## பரீட்சை ஒத்திவைப்பு

[நாவற்குழி]

இன்று நடை பெறவிருந்த தொலைக்கல்வி மூலம் பயிற்சி பெறும் 89 - 91 கல்வியாண்டின் பகுதி I பரீட்சை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

பரீட்சைக்கான திகதி பின்னர் அறிவிக்கப்படும் என்று தொலைக்கல்விப்பிரிவின் சிரேஷ்ட விரிவுரையாளர் திரு ம. செ. அலெக்ஸாந்தர் தெரிவித்தார். [1]07


## 30th Death Anniversary of Rev. Fr. T. M. F. Long

[O. M. I.]

A Requiem High Mass will be offered on Tuesday 30th April 1991 at 6 30 a. m. in the College Chapel, followed by a memorial meeting and tea in the O. B. A. premises.

All old boys and well wishers are cordially invited.

Rev. Fr. C. A. F. Joseph
President
St. Patrick's College, O. B. A , Jaffna.

(A-1242)


## குளிர்பானம் வழங்க ஏற்பாடு

[யாழ்ப்பாணம்]

இணுவில் தாவடிச் சந்திகளில் இம்முறை மேதின ஊர்வலத்தில் கலந்துகொள்ளும் மக்களுக்கு குளிர்பானம், சர்க்கரைத் தண்ணீர் கொடுக்க அப்பகுதியிலுள்ள தொழிற் சங்கங்கள், வர்த்தகர்கள் பந்தல்கள் போட்டு ஏற்பாடுகள் மேற்கொள்ளுகின்றனர்.

## பரீட்சையில் சித்தி

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழகத்தின் எம். எஸ் ஸி. பரீட்சையில் எஸ். கோகுலதாசன் சித்தியடைந்துள்ளார். [152]

## தேர்தல் கட்டுப்பாட்டு நிலையம்

(புதுடில்லி)

தேர்தல் தொடர்பான புகார்களை உடனுக்குடன் பதிவு செய்வதற்காக டில்லி தேர்தல் காரியாலயத்தில் கட்டுப்பாட்டு நிலையமொன்று திறக்கப்பட்டுள்ளது.

இந்த கட்டுப்பாட்டு அறை தேர்தல் நடவடிக்கைகள் முடிவடையும் வரை இரவு பகலாக தொடர்ந்து இயங்கும்.

## மகோற்சவம்

(உடுவில்)

இணுவில் மேற்கு அருள்மிகு ஸ்ரீ செகராசசேகரப்பிள்ளையார் கோவில் வருடாந்த மகோற்சவம் தற்போது நடைபெற்றுவருகின்றது.

இம்மாதம் 27ம், 28ம் திகதிகளில் நடைபெறும் தேர், தீர்த்தோற்சவங்களுடன் விழா பூர்த்தியடையும். [109]

## டாக்டர் பட்டம்

(யாழ்ப்பாணம்]

கவிஞர் காரை எஸ். சுந்தரம்பிள்ளை யாழ். பல்கலைக்கழகத்தின் டாக்டர் (தமிழ்) பரீட்சையில் சித்தியடைந்துள்ளார்.

இவர் பிரபல கவிஞராவர். இவர் பல கவிதைப் புத்தகங்களை அச்சுருவில் வெளியிட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (152)

## நியமனம்

(பருத்தித்துறை)

பருத்தித்துறை உதவி அரசாங்க அதிபராக ஸ்ரீலங்கா நிர்வாக சேவையைச் சேர்ந்த திரு. செல்லமுத்து ஸ்ரீனிவாசன் நியமிக்கப்பட்டுள்ளார். பருத்தித்துறை பிரதேச சபையின் விசேட ஆணையாளராகவும் திரு ஸ்ரீநிவாசன் நியமிக்கப்படவுள்ளார். [52]

## பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

புலோலி மேற்கு சதாவதானி கதிரவேற்பிள்ளை ஐக்கிய நாணய சிக்கன சேமிப்புச் சங்க நான்காவது வருடாந்தப் பொதுக்கூட்டம் மே மாதம் 5 ஆம் திகதி சங்கத் தலைவர் வே மார்க்கண்டேயபிள்ளை தலைமையில் தம்பசிட்டி மெ. மி. த. க. பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (150)

## ஓய்வு பெற்றார்

[ஊர்காவற்றுறை]

ஊர்காவற்றுறை தபாலகத்தில் தபாலதிபராக கடமையாற்றிய திரு என். குருசிங்கம் இம் மாதத்துடன் ஓய்வுபெறுகின்றார்.

## மேதினத்தில் பங்குபற்ற மக்கள் ஆர்வம்

(யாழ்ப்பாணம்)

மேதினம் தொடர்பாக தீவுப்பகுதியில் ஆலோசனைக் கூட்டம் ஒன்று நடைபெற்றது.

கூட்டத்தில் தொழிற்சங்க உறுப்பினர்கள் சனசமூக நிலைய தலைவர்கள் செயலாளர்கள் கலந்து கொண்டனர். யாழ். மாவட்ட கொள்கை முன்னெடுப்புபொறுப்பாளர் ஆஞ்சநேயர், தீவுப்பகுதி அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் சுதா ஆகியோர் கலந்து கொண்டனர்.

இவ்வருடம் பெருந்தொகையான மக்கள் மேதினத்தில் கலந்துகொள்ள இருப்பதால் தங்களுக்கு பாதைவசதிசெய்து தரும்படி மக்கள் கேட்டுள்ளார்.

## நிர்வாகிகள்

[யாழ்ப்பாணம்]

அகில இலங்கை வர்த்தகக் கலைமன்றத்தின் 30-ம் ஆண்டு கூட்டம் பளை மகா வித்தியாலத்தில் மன்றத் தலைவர் அ. க. சிவசம்பு தலைமையில் நடைபெற்றபோது பின்வருவோர் நடப்பு வருட உத்தியோகஸ்தர் விபரம்:

தலைவர்: அ. க. சிவசம்பு, உப-தலைவர்: ஆ. ஸ்ரீஸ்கந்தமூர்த்தி, செயலாளர்: மா. புவனேந்திரன், உப-செயலாளர்: வ. க. பாலசுப்பிரமணியம், பொருளாளர்: ச. ஞானப்பிரகாசம்.

## சேவைநலம் பாராட்டு

(மானிப்பாய்)

யாழ். செயலகத்தில் ஓய்வூதியக் கணக்காளராகவும், பிரதம கணக்காயராகவும், பணிபுரிந்த திரு. இராமச்சந்திரன், ஓய்வூதியப் பிரிவில் லிகிதராக பணிபுரிந்த திரு. கே. ஏ. சிவரத்தினம், திரு கே. கனகராசா ஆகியோர் ஓய்வு பெற்றுச் சென்றதையிட்டு ஓய்வூதியக் கிளை ஊழியர்களால் பாராட்டு வைபவம் ஒன்று நடாத்தப்பட்டது.

யாழ். செயலகத்தில் இடம்பெற்ற இவ் வைபவத்தில் பிரதம கணக்காளர் திரு. எஸ். சிவபாலன், ஓய்வூதியக் கணக்காளர் திரு இராசநாயகம் மற்றும் ஊழியர்களும் இவர்களின் சேவையை பாராட்டி உரையாற்றினர்கள்.

## குருபூசைத்தினம்: சிறப்புச் சொற்பொழிவும் கூட்டுப் பிரார்த்தனையும்

(பருத்தித்துறை)

இலங்கை சைவ மன்றம் நாளை 26-ம் திகதி பருத்தித்துறை பசுபதீஸ்வரர் ஆலய மண்டபத்தில் சந்தானகுரவரான உமாபதி சிவாச்சாரியார் குருபூசை நடாத்தவுள்ளது. இதனையொட்டி ஆலயத்தில் விசேட பூசைகள், ஆராதனைகள் நடைபெறும்.

பிற்பகல் இலங்கை சைவ மன்றத்தலைவர் பேராசிரியர் வீ கே. கணேசலிங்கம் தலைமையில் சிறப்புச்சொற்பொழிவுகள் இடம்பெறவுள்ளன. உமாபதி சிவாச்சாரியார் பற்றி ஆசிரியை திருமதி பொ. இரத்தினசோதியும் சித்தாந்த அட்டகம் பற்றி சைவசித்தாந்த பண்டிதர் கு. வி. மகாலிங்கமும், பதிமுது நிலை, உயிரவைநிலைகள் பற்றி பண்டிதர் வித்துவான் க சந்திரசேகரமும் சொற்பொழிவாற்றுவார்கள். பிற்பகல் பக்த அடியார் குழுவினரின் கூட்டுப்பிரார்த்தனையும் இடம் பெறும்.

சிவஸ்ரீ வ. வே. நவரத்தினம் குருக்கள் நன்றி தெரிவிப்பார். இக்குரு பூசைதின விழாவுக்கான சகல ஒழுங்குகளையும் இலங்கைச் சைவ மன்ற பொதுச் செயலாளர் திரு. வி. புவனேந்திரன் மேற்கொண்டுள்ளார்.

# முதல்உதவி - பாடசாலையிலும் பணிமனையிலும்

ந. சிவராஜா,
மருத்துவ பீடம், யாழ். பல்கலைக்கழகம்.

முதல் உதவி தேவைப்படும் பொழுது உடனடியாக அளிக்கப்படவேண்டியது. ஆகவே முதல் உதவி மற்றவர்களுக்கு பயன்படவேண்டுமானால் அதைப்பற்றிய அறிவு எல்லோருக்கும் இருக்க வேண்டும். இன்றைய காலகட்டத்தில் இதன் அவசியம் பன்மடங்கு அதிகரித்து உள்ளது.

முதல் உதவி பற்றிய அறிவை பரப்புவதற்கு பல வழிவகைகள் கையாளப்பட்டுள்ள. புத்தகங்கள்வெளியிட்டும் அங்கும் இங்கும்வகுப்புகள் நடத்தப்பட்டும் முதல் உதவியைப் பற்றிய அறிவு பரப்பப்பட்டு வந்திருக்கிறது. இந்த முறைகளை கையாள்வதால், முதல் உதவியைப்பற்றிய அறிவு ஒரு சிலரை மட்டும் போய் சேர்ந்திருக்கிறது. பெரும் பாலான மக்களுக்கு அடிப்படை முதல்உதவியைப் பற்றிய அறிவு இல்லாத காரணத்தால் முதல்உதவி தேவைப்படும் சந்தர்ப்பங்களில் அருகில் உள்ளோரின் செயல் நிலைமையை மோசமடையச் செய்திருக்கிறது.

முதல் உதவி பற்றிய அறிவையும், அதை அளிக்கும் ஆற்றலையும், பரந்த அளவில் பரப்ப கூடிய இடம் பாடசாலை, நமது நாட்டில் 33 5 சதவீதத்தினர் 5 வயதிற்கும் 19 வயதிற்கும் இடைப்பட்டவர்கள். இவர்களில் பெரும்பாலானவர்கள் தினமும் 5–6 மணித்தியாளங்கள் பாடசாலைகளில் கழிக்கிறார்கள். இவர்களுக்கு முதல் உதவிபற்றிய அடிப்படை அறிவைக் கொடுத்தால் நாளடைவில் சமூகத்திலுள்ள அனைவரும் முதல்உதவி பயிற்சி பெற்றவர்களாக இருப்பார்கள். அதேசமயம் பாடசாலைகளில் கொடுக்கப்படும் இந்தபயிற்சி அந்த பிள்ளைகளின் வீடுகளுக்கு உடனடியாக சென்றடைந்து இறுதியில் சமூகத்தை சென்றடையும்.

மாணவர்களுக்கு முதல் உதவி பற்றிய அறிவையும் அதை அளிக்கும் ஆற்றலையும் வளர்ப்பதற்கு இன்னொரு முக்கிய காரணம் உண்டு. நமது நாட்டில் சிறு விபத்துகள் கூடுதலாக ஏற்படுவது இளம் வயதில் உள்ளவர்களுக்கே.

பாடசாலைகளில் முதல் உதவிக்கென்று ஒரு பயிற்சி நெறி அமைத்து, சில மணித்தியாளங்களுக்கு பயிற்சி கொடுத்து பின் அதைப் பற்றி சிந்தியாது இருப்பது பலன் தராது.

முதலுதவியை மற்றைய பாடங்களின் ஒரு அம்சமாக கற்பிக்கவேண்டும். உதாரணமாக:

— பாடசாலை அறையில் ஏற்படக்கூடிய விபத்துக்களும் அவற்றிற்கான முதல் உதவியும் மாணவர் தெரிந்து வைத்திருக்கவேண்டும். இதற்கு வகுப்பாசிரியர், வகுப்பில் மாணவர்களின் தரத்திற்கு ஏற்றபடி சொல்லிக் கொடுக்க வேண்டும்.

மனையியற் கலை (Home Science) வகுப்பில் ஏற்படக் கூடிய விபத்துக்களைப்பற்றியும் அவற்றுக்கான முதலுதவியும் அப்பாட ஆசிரியரினால் முதல் வகுப்பிலேயே சொல்லிக் கொடுக்க வேண்டும்.

இரசாயன ஆய்வு கூடத்திலும் விளையாட்டு மைதானத்திலும் கைப்பணி வகுப்பிலும் இது பொருந்தும்.

இப்படி செய்யும் பொழுது முதல் உதவியைப் பற்றி மாணவர்கள் பல சந்தர்ப்பங்களில் பல ஆசிரியர்களிடம் கற்பார்கள். திரும்ப திரும்ப ஒரு விடயத்தை கற்கும் பொழுது அது நன்கு மனதில் பதியும்.

ஒவ்வொரு பாடசாலையிலும் ஒரு முதலுதவிப் பெட்டி இருக்கவேண்டும். அவசியம் ஏற்படும் பொழுது மாணவர்களே இதை பாவிக்க தெரிந்திருக்க வேண்டும். அப்படி செய்யும் பொழுது அவர்களின் அறிவுடன செயல் திறனும் வளர்ச்சியடையும். தங்கள் வீடுகளிலும் இப்படியான முதல் முதல் உதவிப்பெட்டி அமைத்து பாவிக்க முனைவார்கள்.

ஆசிரியர்கள் முதல் உதவியைப்பற்றி சொல்லிக் கொடுப்பதோடு நில்லாமல், அடிக்கடி சந்தர்ப்பம் ஏற்படும் பொழுது அவர்களிடம் கேள்விகள் கேட்டு அவர்களின்ளின் அறிவை விருத்தி செய்வதோடு, முதல் உதவி அளிப்பதில் ஆர்வத்தையும் உண்டாக்க வேண்டும்.

மேற்குறிப்பிட்ட கருத்துகள் பாடசாலைகளுக்கு மாத்திரம் அல்லாது. பல்கலைக்கழகங்களுக்கும், தொழில்நுட்பக்கல்லூரிகளுக்கும் மற்றும் தொழில் பயிற்சி நிலையங்களுக்கும் பொருந்தும்.

பணிமனைகளில் அங்கு பாவிக்கப்படும் இயந்திரங்கள் உபகரணங்கள், மூலப்பொருட்கள் மூலம் விபத்துகளும் பாதிப்புகளும் ஏற்படலாம். இவற்றைப் பற்றிய அறிவும் இவற்றை தடுப்பதற்கும் முதலுதவி அளிப்பதற்கும் வேண்டிய ஆற்றல் குறிப்பிட்ட தொழில் செய்யும் ஒவ்வொருவருக்கும் இருக்க வேண்டும்.

இதற்காக, ஒவ்வொரு தொழிலும் ஏற்பட்டிருப்பவர்களுக்கு அந்தந்த தொழிலில் ஏற்படக்கூடிய விபத்துகளும் அதற்கான முதலுதவியும் தடுப்பு முறைகளைப் பற்றியும் எடுத்துச் சொல்வதற்கு வகுப்புகள் நடத்துவது இன்றைய காலகட்டத்தில் மிக அவசியமாகின்றது.

## மே தினத்தையொட்டி நடந்த போட்டிகளில் வெற்றி பெற்றவர்களின் விபரம்

(யாழ்ப்பாணம்)

மேதினத்தை முன்னிட்டு தமிழ்ஈழ ஆய்வு நிறுவனத்தினரால் நடாத்தப்பட்ட போட்டிகளில் வெற்றிபெற்றோர் விபரம் வருமாறு: (வலிகாமம் பகுதி)

உழவுத்தொழில் 1 தா. இராமநாதன், ஆவரங்கால், 2. பொ. திருபாலசிங்கம் சங்குவேலி, 3. செ. சோமசுந்தரம், சண்டிலிப்பாய்.

பனை ஏறுதல் போட்டி 1. க இராஜகந்தவேள், 2 பொ. தனபாலசிங்கம் அராலி, 3. த. தவராசாசங்குவேலி.

துலா மிதித்தல் போட்டி 1. வீ தனபாலசிங்கம், 2 சு. செல்வராசா (கந்தரோடை) 2. நா. மகேசன், ஆ கிருஷ்ணபிள்ளை (ஆவரங்கால) 3 வே. சிவலிங்கம், இ நகுலேஸ்வரன் (தொல்புரம்)

கிடுகு பின்னல் போட்டி 1. இ. பொன்னம்பலம் உடுவில், 2. வை. கணபதிப்பிள்ளை புத்தூர். 3. அண்ணைச்சாமி ஆவரங்கால்.

குட்டான் இழைத்தல் போட்டி 1. க. செல்லமுத்து ஆவரங்கால், 2 மு. கனகசிங்கம் உடுவில். 3 து. ஜெயந்தன் புத்தூர். (ஈ)

## வலிவடக்கு அகதிகளுக்கு நவாலியில் வீடுகள்

[மானிப்பாய்]

புனர்வாழ்வு நிறுவனம் நவாலி புலவர் வளவில் வலி வடக்கு அகதிகளுக்கு வீடுகள் அமைத்து கொடுத்துள்ளது.

வலி-வடக்கில் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கைகளினால் இடம்பெயர்ந்து நவாலி அரசடி மகாவித்தியாலயம், அட்டகிரி பாடசாலை ஆகியவற்றில் பலமாதங்களாக தங்கியிருந்த இவ் அகதிகளுக்கு மேற்படி நிறுவனம் புலவர் வளவு என அழைக்கப்படும் சுமார் 3 ஏக்கர் காணியில் தனித்தனி சிறிய வீடுகள் அமைத்துக் கொடுத்துள்ளது. அத்துடன் சிறுவர் பாடசாலை நூல்நிலையம் கிணறுகள் என்பனவும் அமைத்துக்கொடுத்துள்ளதுடன் சிறுவர் பாடசாலைக்கு நான்கு ஆசிரியைகளையும் நியமனம் செய்து அவர்களுக்கு மாதாந்த சம்பளமும் புனர்வாழ்வு நிறுவனத்தினால் வழங்கப்படுகிறது

மேலும் இந்நிறுவனம் இவ் அகதிகளுக்கு பல உதவிகளைச் செய்ய முன்வந்திருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

(71)

## இராசி பலன்

25-04-1991

வியாழக்கிழமை

துராஷ்சி பிூ இூ 2. 37 வரை.

பூரம் மு. ப. 10; 49 வரை, இராகுகாலம் பகல் 1–30 முதல் 3-00 வரை.

சுபநேரம் காலை 7–30 முதல் 9–00 வரை.

சித்தயோகம்.

மேடம்: பெரியோர் ஆசி, தொழில்லாபம், குடும்பமுன்னேற்றம்.

இடபம்: வாக்கு கலகம், கடன்சுமை, தொழில் மந்தம்,

மிதுனம்: வாகன அலைச்சல் மறதியின்மை குடும்பபிரிவு.

கடகம்: எதிர்பார்த்த வெற்றி, குடும்பமகிழ்ச்சி, வீரம்.

சிங்கம்: அபகீர்த்தி, இன சனப்பகை, தொழில் நஷ்டப்.

கன்னி: மறைமுக நட்பு. வீண்வம்பு, தொழில் சிறப்பு.

துலாம்: குடும்ப செலவு,

விருச்சிகம்: கல்வியால் பெருமை, அறிஞர் சந்திப்பு, குடும்பசுகம்.

தனுசு; தொழில் குறை, விரோதம், அலைச்சல்மிகுதி, பணவிரோதம், அந்நியவாசம்

மகரம்: தொழில் தகராறு, சகோதர உதவி, பணமுடை.

கும்பம்: தனிமைப்பாடல், தானதர்மம், மறைமுக விரோதம்.

மீனம்: தொழில் கஷ்டம், பணவரவு, புத்திரர் கவலை

- ஜோஸ்யர்

## திருட்டு

[மானிப்பாய்]

நல்லூர் செம்மணி வயல்களில் பட்டப்பகலில் சிறுதானியங்கள் திருடப்படுவதாக அப்பகுதி விவசாயிகள் புகார் தெரிவிக்கின்றனர்.

இவ் வயல்களில் நண்பகல் வேளையில் உரப்பைகளுடன் திடீரென செல்லும் சிறுவர்கள் அங்குள்ள சிறுதானியங்கதிர்களை கொய்து கொண்டு சென்றுவிடுகின்றார்களாம்.

[71]

## உபஉணவு உற்பத்தி வடமராட்சியில் அதிகரிப்பு

(வடமராட்சி)

வடமராட்சியில் சாமை, குரக்கன், தினை போன்ற உப உணவுப் பொருட்கள் அதிகமாக உற்பத்திசெய்யப்பட்டுள்ளது.

மாலி சந்தி, மந்திகை போன்ற பகுதிகள் சுற்றுடலில் மேற்படி சாமை, குரக்கன், தினை போன்ற உபஉணவுப்பொருட்கள் உற்பத்தி அதிகரிக்கப்பட்டுள்ளது.

மேலும் இந்த உபஉணவுப் நல்லவிளைச்சலையும் விவசாயிகளுக்கு கொடுத்துள்ளது குறிப்பிடத்தக்கது. [51]

## தமிழ்நாடு தேர்தல் களம்

### மூன்றுவது பட்டியல்

காங்கிரஸ்கட்சி மூன்றுவது வேட்பாளர் பட்டியலை நேற்று வெளியிட்டுள்ளது. இதனைத்தொடர்ந்து வேட்பாளர்கள் தங்கள் தொகுதிகளுக்கு விரைந்து பிரசாரவேலையை ஆரம்பித்துள்ளனர்.

### 150 வேட்புமனுக்கள்

தமிழ்நாட்டிலிருந்து லோக்சபைக்கான 39 இடங்களுக்கு இதுவரை 25 வேட்புமனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது 234 சட்டசபைத் தொகுதிகளிக்கு நேற்று 150 வேட்புமனுத் தாக்கல் செய்யப்பட்டன.

### சுயேட்சைகள் போட்டி

மத்திய சென்னையில் 3 சுயேட்சை வேட்பாளர்களும் வட சென்னையில் 3 சுயேட்சை வேட்பாளர்களும், லோக்சபாவுக்கு வேட்புமனுக்களை தாக்கல் செய்துள்ளனர். தென் சென்னைக்கு இதுவரை எவரும் வேட்புமனு தாக்கல் செய்யவில்லை.

### தேர்தல் பார்வையாளர்

தேர்தலை பார்வையிட நாடுமுழுவதும் நியமிக்கப்பட்டுள்ள 221 மூத்த அதிகாரிகளில் 13 பேர் தமிழ்நாட்டுக்கு அனுப்பப்பட்டுள்ளனர். இவர்களுக்கு உதவியாகவும் சிலர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

### விலங்குகள், பறவைகள்

தேர்தல் சின்னங்களாக விலங்கு, பறவை பாவிக்கப்படுவது நீக்கப்படும் என்று தேர்தல் ஆணையாளர் தெரிவித்துள்ளார். இவற்றை சின்னங்களாகக் கொண்ட கட்சிகளுக்கு வேறு சின்னங்கள் வழங்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார். இது தொடர்பாக கட்சிகள் வற்புறுத்தப்படமாட்டாதென்றும், கட்சிகள் தாமாவே விரும்பி வேறு சின்னங்களை பெற முன்வரவேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

### சக்கரம் ஏர் சின்னம்

சமாஜவாதி ஜனதாதள் சக்கரத்துடன் ஏர் சின்னத்தையே தேர்தலில் பயன்படுத்தும். பானையுடன் பெண் சின்னம் அக்கட்சிக்கு வழங்கப்பட்டதை அக்கட்சி ஆட்சேபித்ததை தொடர்ந்து பழைய சின்னம் வழங்கப்பட்டுள்ளது.

### புதிய வேட்பாளர்

தமிழ்நாடு பெரம்பூரில் தி மு. க. வேட்பாளர் என்றுமுதலாவது பட்டியலில் அறிவிக்கப்பட்டவரின் பெயர் நீக்கப்பட்டு தற்போது வேறு ஒரு வேட்பாளர் நியமிக்கப்பட்டுள்ளார்.

## உதவி அரசாங்க அதிபர்களாக நிர்வாக சேவை அதிகாரிகள்

[பருத்தித்துறை]

யாழ். மாவட்டத்திலுள்ள சகல உதவி அரச அதிபர் அலுவலகங்களிலும் ஸ்ரீலங்கா நிர்வாக சேவையைச் சேர்ந்த அதிகாரிகளை உதவி அரசாங்க அதிபர்களாக நியமிக்கப்பட்டுப் பொறுப்பேற்க உள்ளனர்.

ஸ்ரீ லங்கா நிர்வாக சேவையைச் சேர்ந்த அதிகாரிகளை உதவி அரசாங்க அதிபர்களாக நியமிக்கும் துரித நடவடிக்கைகளை வடக்கு-கிழக்கு மாகாண உள்துறை அமைச்சு மேற்கொண்டுள்ளது.

யாழ். மாவட்டத்தில் இதுவரை ஒரு சில பிரிவுகளிலேயே ஸ்ரீ லங்கா நிர்வாக சேவையைச் சேர்ந்த உதவி அரசாங்க அதிபர்களாகச் செயற்பட்டுவருகின்றனர். பெரும்பாலான உதவி அரச அதிபர் பிரிவுகளில் ஸ்ரீலங்கா நிர்வாக சேவையைச் சேராத உத்தியோகத்தர்களே பதில் உதவி அரசாங்க அதிபர்களாகக் கடமையாற்றிவருகின்றனர். தற்போது சகல உதவி அரசாங்க அதிபர் அலுவலகங்களிலும் ஸ்ரீ லங்கா நிர்வாக சேவை அதிகாரிகளே உதவி அரசாங்க அதிபர்களாக நியமிக்கப்படவேண்டும் என்று பணிக்கப்பட்டுள்ளது.

## முரசொலி

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

10-04-1991 அன்று 'சிறுவன் மீது பாலியல் வன்முறை பிரயோகித்த பெண்கள்' என்ற தலைப்பில் முரசொலி பத்திரிகையில் ஒரு செய்தி வெளிவந்திருந்தது. அச்செய்தியில் சம்பந்தப்பட்ட பெண்கள் ஆசிரியைகள் என்று விழிக்கப்பட்டிருந்தது. இது உண்மைக்குப்புறம்பானது என்றும் குறித்த செய்திக்கு தம்மால் மறுப்புத்தெரிவிக்கப்பட்டிருந்த நிலையிலும் அதைக் கருத்திலெடுத்து பிரசுரிக்கத் தவறியதாலும் முரசொலி பத்திரிகை மீது நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என்று வடஇந்து மகளிர் கல்லூரி ஆசிரியைகளும், வடமராட்சி ஆசிரியர் சங்கமும் எம்மிடம் முறைப்பாடு செய்திருந்தனர்.

இந்த முறைப்பாட்டின் அடிப்படையில் நாம் செய்த விசாரணையின் முடிவில் முரசொலி பத்திரிகையின் பிரதம ஆசிரியர் பொறுப்பற்ற விதத்திலும், அநாகரிகமாகவும் நடந்து பத்திரிகாதர்மத்தை மீறியுள்ளார் எனக் கண்டறிந்துள்ளோம்.

மாணவ- ஆசிரிய-பெற்றோர் உறவுச்சங்கிலியில் வக்கிரமான சந்தேகத்தை உருவாக்கியுள்ள இந்தச் செய்தி தொடர்பான தமது ஆட்சேபனையை 14-04-1991 அன்று வட இந்து மகளிர் கல்லூரி ஆசிரியைகளும், வடமராட்சி ஆசிரியர் சங்கமும் முரசொலிக்கு அனுப்பி வைத்திருந்தது.

இதேவேளை தமிழாசிரியர் சங்கச்செயலாளர் திரு. மகாசிவமும் இந்தச் செய்தி தொடர்பான தங்களது அதிருப்தியை பத்திரிகைகளுக்கு விடுத்திருந்தார். இதையும் உடனடியாகக் கருத்திலெடுத்துப் பிரசுரிக்க முரசொலி தவறிவிட்டது முரசொலியின் இந்த அலட்சியப் போக்கானது ஆசிரிய சமூகத்தின் வெறுப்பை சம்பாதித்ததுடன் பத்திரிகை எரிப்புக்கும் வழிகோலியது.

ஆனால் இந்த எரிப்பு நடவடிக்கை ஏற்றுக்கொள்ளப்பட முடியாதது. திரு. மகாசிவத்தின் கடிதத்தினை 18-04-1991 அன்று ஈழநாதம் பத்திரிகை பிரசுரித்த மறுநாள் (19-04-1991) பிரதம ஆசிரியரது பதில் கருத்துடன் முரசொலியும் கடிதத்தை பிரசுரித்தது. முரசொலி ஆசிரியரது பதில் குதர்க்க வாதங்களைக் கொண்டதாகவும் தங்களது தவறை நியாயப்படுத்தும் தன்மையுடையதாயுமே அமைந்திருந்தது.

குறித்த செய்தியில் தவறுகள் இருக்கின்றது என்பதைத் தெரிந்துகொண்ட நிலையிலும் தொடர்ந்தும் பொறுப்பற்ற விதத்தில் பொய்களையும், புனைகதைகளையும் முரசொலி ஆசிரியர் பிரசுரித்துவந்தார். சர்ச்சைக்குரிய அந்தச் செய்தி 10, 11, 13, 18, 19 ஆகிய திகதிகளில் புதிய தகவல்களுடனும், விளக்கங்களுடனும் மீண்டும் மீண்டும் பிரசுரிக்கப்பட்டன. சம்பந்தப்பட்ட பெண்களை முதலில் ஆசிரியைகள் என்றும், பின்னர் அவர்கள் ஆசிரியைகள் அல்ல, குறித்த சிறுவனுக்கு ரியூசன் கொடுத்த பெண்கள்தான் என்றும், அதன் பின்னர் அந்தப் பெண்கள் உயர்தரப் பரீட்சையில் தோற்றுவதற்காகக் கொழும்பில் இருந்து வந்தவர்கள் என்றும், போதைப் பொருள் பழக்கம் உடையவர்கள் என ஊகிக்கப்படுகின்றது என்றும்,

பாதிக்கப்பட்ட சிறுவன் மந்திகை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுப் பின்னர் யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார் என்றும், தொடர்ந்தும் யாழ். போதனா வைத்தியசாலையிலேயே தங்கிச் சிகிச்சை பெற்றுவருகின்றார் என்றும் செய்திகளை வெளியிட்டது. அத்துடன் தான் பிரசுரித்த செய்தியை மக்களும் நம்ப வேண்டும் என்பதற்காக விசேட நிருபர் ஒருவர் அனுப்பப்பட்டுத் தகவல்கள் பெறப்பட்டன என்றும் எழுதியது. உண்மையில் இவை அனைத்துமே பொய்; அத்துடன் வக்கிர உணர்வுகளை ஏற்படுத்தக்கூடிய வகையில் புனையப்பட்ட கட்டுக்கதைகள் என எமது விசாரணை மூலம் தெளிவாகியுள்ளது.

உண்மை என்னவென்றால், குறித்த இளைஞன் உளவளர்ச்சி குன்றியவன். அதேசமயம் சம்பந்தப்பட்ட பெண்கள் என்பவர்கள் முறையே 12, 13, 15, 17 வயதினர் ஆகும். அதேவேளை முரசொலி பறைசாற்றியதைப் போல பாலியல் வன்முறை நடைபெறவில்லை.

முரசொலியின் மேற்குறித்த விடயங்கள் அனைத்துமே சமூகப் பொறுப்புணர்ச்சி உடைய பத்திரிகைகளுக்கு இருக்கக் கூடாதவை. இத்தகைய குறைபாடுகள் அனைத்திற்கும் முரசொலியின் பிரதம ஆசிரியரே காரணமாகும்.

பத்திரிகைகளுக்கு இருக்க வேண்டிய சமூக நோக்குகளையும், கடப்பாடுகளையும் அவர் புரிந்துகொண்டிருந்தும் தங்களுக்குள்ள சில லாபங்களுக்காகச் செய்திகளைத் திரித்தும், மிகைப்படுத்தியும் சமூகத்தில் ஓர் ஒழுங்குமுறை இல்லாமற் போய்விட்டதைப் போன்றதொரு மாயையை மக்களுக்கு உருவாக்க முயல்கின்ற தன்மையை இது காட்டுகின்றது. முன்னர் தமிழீழத்தக்குள் வந்துகொண்டிருந்த சில மஞ்சள் பத்திரிகைகளைப் போல வக்கிர உணர்வுகளைத் தூண்டிநிற்கும் செய்திகளை, ஆவலைத் தூண்டும் விதத்தில் வெளியிடுவதன் மூலம் பத்திரிகையின் விற்பனையைக் கூட்டலாம் என்பதும் ஒரு நோக்கமாக இருந்திருக்கிறது. இவைகள் சமூகத் தீங்கானவை. ஆகவே சமூகத்தின் எண்ணவோட்டத்தை உருவாக்கும் சக்தியைக் கொண்ட பத்திரிகை ஒன்றின் பிரதம ஆசிரியராக இருப்பதற்கான எல்லாத் தகுதிகளையும் தற்போதைய முரசொலி ஆசிரியர் இழந்து நிற்கின்றார்.

இதற்கு முன்னரும் பல தடவைகள் முரசொலி பத்திரிகை பொறுப்பற்ற முறையில் செய்திகளை வெளியிட்டு வந்துள்ளது. இவை குறித்து முரசொலி உரிமையாளருக்கும், பிரதம ஆசிரியருக்கும் பலதடவைகள் சுட்டிக்காட்டியிருக்கின்றோம்; கலந்து பேசியிருக்கின்றோம்; ஆனால் அத்தவறுகள் திருத்தப்படவில்லை. அதன் தொடர்ச்சிதான் 10-04-1991 முரசொலி வெளியிட்ட உண்மைக்குப் புறம்பானதும், பொறுப்பற்றதுமான செய்தி வெளியீடு ஆகும் இந்தச் செய்தியை தவறு என ஆசிரிய சமூகம் சுட்டிக்காட்டி இருந்தும் உடனடியாகவே மறுப்புச்செய்தியை வெளியிட்டு உண்மை நிலையை வெளியிடாததுடன் அந்தத் தவறை நியாயப்படுத்தவும் முரசொலி பத்திரிகை முயன்றிருக்கின்றது.

எனவே மேற்குறித்த குற்றச் செயல்களுக்கான தண்டமாக 50,000 ரூபாவை முரசொலி உரிமையாளர் செலுத்த வேண்டும் எனப் பணிக்கப்பட்டுள்ளார், இப்பணம் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவிகளைச் செய்து வரும் தமிழ் அகதிகள் புனர்வாழ்வுக் கழகத்திடம் ஒப்படைக்கப்படும்.

---


இலங்கை செஞ்சிலுவைச் சங்கம்
யாழ்ப்பாணக் கிளை

### தமிழ், ஆங்கிலம், தட்டச்சு, சுருக்கெழுத்து பாடநெறி

மேற்படி பாடநெறி இலவசமாக முழு நேரம்/பகுதி நேரம் நடாத்தப்படும்

1. விரும்பும் மாணவர்கள் விண்ணப்பிக்கவும்.
2. தகைமையுள்ள ஆசிரியர்கள் விண்ணப்பிக்கவும். தகைமைக்கேற்ப வேதனம் வழங்கப்படும்.
3. தமிழ், ஆங்கில தட்டச்சுக்கள் உடனே தேவை: இவை விற்பனைக்கு இருப்பின் விலை, அதன் விபரங்கள் ஆகியனவற்றை அனுப்பிவைக்கவும்,
4. தட்டச்சு திருத்துனர், தனித்தனி தட்டச்சு திருத்துவதற்கு வேதனம் வழங்கப்படும்.

07-05-1991க்கு முன் வரும் விண்ணப்பங்களே பரிசீலனைக்கு எடுக்கப்படும்.

கௌரவ செயலாளர்

செஞ்சிலுவைச் சங்கம்,
யாழ்ப்பாணக் கிளை,
73, கண்டி வீதி,
சுண்டிக்குளி, யாழ்ப்பாணம். (ஏ 1245)


---

இப் பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி 63ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1991-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 25ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Regesteted as a News Paper at the General Post office Sri Lankaunder Licence numper B/100306/81.

---

## இலங்கையினுள்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அங்கு அவர் மேலும் பேசுகையில்: நாடு உள்நாட்டுப் போரில் சிக்கியுள்ள இவ்வேளையில் இவ்வெளிநாட்டு சக்திகள் நாட்டில் கலவரத்தையும் குழப்பத்தையும் ஏற்படுத்த முயல்வதாகவும் கூறினார். (சி)

## புலிகள் தாக்குதல்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கொல்லப்பட்டதாகவும் மற்றொரு தாக்குதலில் ஒரு சிப்பாய் கொல்லப்பட்டதாகவும் தெரியவருகிறது.

இத்தாக்குதலில் பல ஆயுதங்களும் மீட்கப்பட்டது. [சி]

## பரீட்சார்த்திகள்

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

குறைந்து காணப்படுவதாக கல்விப்பகுதி வட்டாரங்கள் 'ஈழநாடு'வுக்கு தெரிவித்தன

பரீட்சைகள் முடிவடைந்ததும் செஞ்சிலுவை சங்கம் மூலம் விடைத்தாள்கள் கொழும்பிற்கு எடுத்துச் செல்லப்படவுள்ளதாகவும் அறிய வருகிறது. (83)

## மதலினு

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

இதன் உள்ளூர் முகவர்களான மூவருக்கு தலா 3லட்சம் ரூபா குற்றப் பணமாக விதிக்கப்பட்டுள்ளது. கடந்த ஒரு மாத விசாரணையின் பின் இம்முடிவு எடுக்கப்பட்டதாம்

பெல்ஜியத்திலிருந்து தாய்வான் நோக்கி சென்ற இக் கப்பலில் 101 தொன் நிறையுள்ள ஆயுதங்கள் இருந்தன. (சி)

## புதிய அதிபர்

(கொழும்புத்துறை)

யாழ்: அல்லைப்பிட்டி பராசக்தி வித்தியாசாலையின் புதிய அதிபராக திரு. கே. பேரின்பநாயகம் நியமனம் பெற்றுள்ளார். (154)

---

# காரைநகர் மீண்டும் வழமைக்கு திரும்புகிறது

(யாழ்ப்பாணம்)

காரைநகர் மீண்டும் வழமைக்குத் திரும்புகிறது. இடம் பெயர்ந்த மக்கள் தமது வீடுகளுக்குத் திரும்பியவண்ணம் உள்ளனர்.

அண்மையில் இடம்பெற்ற விமான, பீரங்கி, ஷெல் தாக்குதல்களை அடுத்து அப்பகுதியில் இருந்து பெருமளவு மக்கள் இடம்பெயர்ந்திருந்தனர்.

தற்போது அப்பகுதியில் மீண்டும் சுமுகநிலை ஏற்பட்டுள்ளதையடுத்து, காரைநகர் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் 5 கிளைகளும் வலந்தலை அரசினர் வைத்தியசாலையும் இயங்க ஆரம்பித்துள்ளன. பல தனியார் வர்த்தக நிலையங்களும் செயல்படத் தொடங்கியுள்ளன.

ஏனைய பல நோக்குக் கூட்டுறவுச் சங்கக் கிளைகளையும், தபாலகத்தையும் மிக விரைவில் மீண்டும் பழைய இடங்களில் இயங்கச்செய்வதற்கு காரைநகர் வட்ட அவை நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. (சி)

---

# அப்புத்தளையில் பஸ் விபத்து 19 பயணிகள் பலி

(கொழும்பு)

மகியங்கனையிலிருந்து கொழும்பு நோக்கிச் சென்றுகொண்டிருந்த தனியார் பஸ் ஒன்று அப்புத்தளையில் பள்ளம் ஒன்றில் வீழ்ந்ததில் 19 பயணிகள் கொல்லப்பட்டனர். பலர் படுகாயமடைந்தனர்.

நேற்று நடைபெற்ற இப் பயங்கரவிபத்தில் காயமடைந்தோர் உடனடியாக ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டு தீவிர சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். (க)

---

# புளொட் - இராணுவம் சூடு 6 தமிழர் படுகாயம்

(வவுனியா)

வவுனியா நகருக்குள் சென்ற பொதுமக்கள் மீது இராணுவமும், புளொட்டும் மேற்கொண்ட துப்பாக்கி சூட்டில் 6 பேர் படுகாயமடைந்தனர்.

நேற்றுக்காலை 9-45 மணிக்கு இச்சம்பவம் இடம்பெற்றது. காயமடைந்தவர்கள் வவுனியா ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை கடந்த வாரம் புளொட்டினால் கைதுசெய்யப்பட்ட இருவர் இதுவரை விடுதலை செய்யப்படவில்லை. (க)

## ஹெலி சூடு

(புலோலி)

வல்லைப் பகுதியில் நேற்று (புதன்) பிற்பகல் 1-30 மணியளவில் ஹெலிகொப்டர் ஒன்று கலிபர் தாக்குதலை மேற்கொண்டது.

இத் தாக்குதல் தொண்டமானாறு வரை இடம்பெற்றது. (61)

---


## மரண அறிவித்தல்

### சு. பரமநாதன்

மீசாலை தெற்கு, காலஞ்சென்ற திரு. சுப்பையாவினதும் மீனாட்சிப்பிள்ளையினதும் அன்பு மகனும், குமரபுரம்-பரந்தனில் வசிட பவருமாகிய திருவாளர் சு பரமநாதன் 21—4—91 அன்று காலமானார். அன்னார் விமலாதேவியின் அன்புக்கணவரும், பிரசன்னா, கவிதா, நிருபன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், குமரபுரம் திரு. வே சுப்பிரமணியம் தம்பதியினரின் மருமகனும், செல்வி இராசம்மா திருமதி செ. தம்பித்துரை (ஆசிரியை-மீசாலை விக்கினேசுவர மகாவித்தியாலயம்), திரு சு. பாலசிங்கம் (பாலன்), திரு சு. பாக்கியநாதன் (ரசசு) ஆகியோரின் அன்புச் சகோதரனுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 22-4 91 திங்கட்கிழமை பரந்தனில் நடைபெற்றது. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
டாக்டர் பொ. வே. தம்பித்துரை
சாவகச்சேரி வடக்கு.

[சி-4678]

### நாகமணி சின்னத்துரை

சரவணையைப் பிறப்பிடமாகவும், வேலணை கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட நாகமணி சின்னத்துரை காலமாகிவிட்டார். அன்னார் நகுலேஸ்வரியின் அன்புக்கணவரும், தில்லைக்காந்தன் (ஜேர்மனி), ஜெயகாந்தன் (ஜெயா பென்சி கவுஸ் நவீன சந்தை யாழ். நகர்), வதனகாந்தன் (காந்தன் பென்சி கவுஸ் யாழ் நகர்). திருமதி பேரின்பரதி ஆகியோரின் அன்புத் தந்தையும், சந்திரா, இரத்தினஸ்ரீ, குமாரி மகேந்திரன் (கருமாரி வீடியோ சென்ரர் வேலணை; கருமாரி வீடியோ சென்ரர் ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்பு மாமனுமாவார்: அன்னாரின் இறுதிக்கிரியை அவரது இல்லத்தில் இன்று (25-04-1991) மாலை 3 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வேலணைமேற்கு அம்பலவிமயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும் இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: மகேந்திரன்
மருமகன்

(சி 4680)